திருநெல்வேலியை தலைமையிடமாகக் கொண்டு புதிய காவல் மண்டலம்!

சட்டப்பேரவையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பதிலுரை... 4 ஆம் பக்கத் தொடர்ச்சி

பணி அழைப்புகளில் உடனடியாகத் தலையிட்டு, 2022 ஆம் ஆண்டில் 6 ஆயிரத்து 275 மனித உயிர்களையும், 249 கோடியே 65 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள உடமைகளையும் காப்பாற்றியிருக்கிறார்கள்.

தீயணைப்பு வீரர்கள் பாதுகாப்பாக இருந்தால் தான் மக்களைப் பாதுகாக்க முடியும். அதனால், 1,350 தீ பாதுகாப்பு உடைகள், 450 மூச்சுக் கருவிகள், பாதுகாப்பு உபகரணங்களுடன்கூடிய 3,000 மீட்பு உடைகள் 49 கோடியே 62 இலட்சம் மதிப்பில் வாங்கி, வழங்கப்பட்டுள்ளது.

பொதுமக்களின் சிறப்பான சேவைக்கு தீயணைப்பு நிலையங்கள் மிக, மிக முக்கியம். ஆகவே, 62 கோடியே 18 இலட்சம் ரூபாய் மதிப்பில், மாநிலம் முழுவதும் 17 இடங்களில் புதிய தீயணைப்பு நிலையங்கள் மற்றும் 4 தரம் உயர்த்தப்பட்ட தீயணைப்பு நிலையங்கள் துவக்கி வைக்கப்பட்டுள்ளன. ட்ரோன்கள், புதிய நீர் தாங்கி வண்டிகள், அவசர கால சிறிய மீட்பு ஊர்திகள், வான்நோக்கி நகரும் ஏணி கொண்ட ஊர்தி, உயரமுத்த நீர் தாங்கி வண்டி உள்ளிட்ட தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிக்குத் தேவையான பல்வேறு வாகனங்கள் 24 கோடியே 63 இலட்சம் ரூபாய் மதிப்பில் ஒப்பளிப்பு வழங்கப்பட்டிருக்கிறது.

செங்குன்றம், போடிநாயக்கனூர், துறையூர், ராணிப்பேட்டை, சிவகாசி, பெரும்பாக்கம் உள்ளிட்ட 6 இடங்களில் தீயணைப்பு அலுவலர் மற்றும் பணியாளர்களுக்கு 40 கோடியே 63 இலட்சம் ரூபாய் மதிப்பில் 172 குடியிருப்புகள் கட்ட அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. தீயணைப்புத் துறை பணியாளர்களின் நலனுக்காக இவ்வாறு பல்வேறு திட்டங்களை இந்த அரசு நிறைவேற்றி வருகிறது.

பேரவைத் தலைவர் அவர்களே,

எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இங்கு உரையாற்றும்போது, தமிழ்நாட்டில் இயக்கப்படும் வாகனங்களின் எண்ணிக்கை, அதில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை போன்ற விவரங்கள் எதுவும் குறிப்பிடப்படவில்லை என்று தெரிவித்திருந்தார்கள். இதனைப் பொறுத்தவரையில், மானியக் கோரிக்கை எண் 25, இயக்கூர்திகள் சட்டங்கள் நிருவாகம் குறித்த உள்துறை போக்குவரத்து (Home Transport) கொள்கை விளக்கக் குறிப்பில், பக்கம் 56ல் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது என்பதை அவருக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். சாலைப் பாதுகாப்பைப் பொறுத்தவரையில், எங்களது அரசு பல சீரிய முயற்சிகளை எடுத்து வருகிறது.

சாலை பாதுகாப்புக்கான சிறப்புப் பணிக்குழு!

சாலைப் பாதுகாப்பு தொடர்பாக அரசுக்கு அவ்வப்போது உரிய ஆலோசனைகளை வழங்கிட, மாநில குற்ற ஆவணக் காப்பகத்தின் காவல் துறை கூடுதல் இயக்குநர் அவர்களின் தலைமையில் சாலைப் பாதுகாப்புக்கான சிறப்புப் பணிக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் சாலைப் பாதுகாப்பு முயற்சிகளைத் திறம்படச் செயல்படுத்திட 'இன்னுயிர் காப்போம் திட்டம்' எங்களது அரசால் வகுக்கப்பட்டு, சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இத்திட்டத்தின்கீழ் 19.4.2023 வரை விபத்துக்குள்ளான 1,56,000 நபர்கள் பயனடைந்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இத்திட்டத்தின்கீழ் 138 கோடியே 13 இலட்சம் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது.

2019ல் சாலை விபத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 18,129 ஆக இருந்த நிலையில், தமிழ்நாடு அரசின் சீரிய நடவடிக்கையால் 2022 ல் 17,884 ஆக குறைக்கப்பட்டுள்ளது. முதலமைச்சரின் விபத்து நிவாரண நிதியின்கீழ் 2023-2024 ஆண்டிற்கு 120 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்த அரசைப் பொறுத்தமட்டில், கடந்த அ.தி.மு.க. ஆட்சி உச்ச நீதிமன்றத்துக்கும், ஒன்றிய அரசுக்கும் விபத்து எண்ணிக்கையைக் குறைத்து, தவறான தகவல் அளித்ததுபோல் இல்லாமல், விபத்து குறித்த உண்மைத் தகவல்களைக் கொள்கை விளக்கப் புத்தகத்தில் வெளியிட்டுள்ளது (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாநிலத்தின் வளர்ச்சியில்
காவல்துறையின் முக்கியப் பங்கு!

பேரவைத் தலைவர் அவர்களே,

காவல்துறையினர் எந்தவிதக் குறுக்கீடும் இன்றி சுதந்திரமாகச் செயல்படுகிறார்கள். மாநிலத்தில் சட்டம் ஒழுங்கை சிறப்பாகப் பராமரித்து குற்றங்களில் ஈடுபடுவோர் யாராயினும் அவர்கள் மீது பாரபட்சமின்றி நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

அதனால், புதிய முதலீட்டாளர்கள் தமிழ்நாட்டைத் தேடி வரக்கூடிய சூழ்நிலையை ஏற்படுத்தியிருக்கிறோம். தொழில் பெருகி, நம் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பும் அதிகரித்துக் கொண்டிருக்கிறது. ஆகவே, மாநிலத்தின் வளர்ச்சியில் தமிழ்நாடு காவல்துறை முக்கியப் பங்கு வகிக்கிறது என்பதை, அதுவும் குறிப்பாக, 10 ஆண்டு அ.தி.மு.க. ஆட்சிக் காலத்திற்குப் பிறகு, தமிழ்நாடு காவல்துறை "ஸ்காட்லான்ட் யார்டு" காவல்துறைக்கு இணையாகச் சிறப்பாகப் பணியாற்றி வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அத்தகைய சுதந்திரத்தைக் காவல் துறைக்கு இந்த அரசு கொடுத்திருக்கிறது. இரண்டு ஆண்டுகள் தமிழ்நாடு காவல் துறை நிகழ்த்திய சாதனைகளுடன் திருப்தி அடையக்கூடியவன் அல்ல நான்.

**இந்திய அளவில் முதலிடம்;
தக்க வைப்பதே அரசின் இலக்கு!**

அகில இந்திய அளவில் தமிழ்நாடு காவல் துறை இப்போது பிடித்துள்ள முதலிடத்தைத் தொடர்ந்து தக்க வைக்க வேண்டும் என்பதே இந்த அரசினுடைய இலக்கு. (மேசையைத் தட்டும் ஒலி) அதற்கு இந்த அரசு முழு முயற்சி எடுக்கும். தமிழ்நாடு காவல் துறையின் கடினமான பணியை, நம் சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரும் நன்கு உணர்வார்கள். ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி என அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் இந்த வேண்டுகோளை வைக்கிறேன்.

அவரவர் தொகுதியில், சட்டம் ஒழுங்குப் பணியில் நியாயமாக, நேர்மையாக நடக்கும் காவலர்களை, காவல் துறை அதிகாரிகளை நீங்களும் மனதாரப் பாராட்டி, அவர்களுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளிக்க வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாடு காவல் துறை, இந்தியாவில் முதலிடத்தைத் தொடர்ந்து தக்க வைத்துக்கொள்ளும் அளவிற்கு உதவிட வேண்டும் என்று நான் உங்களையெல்லாம் கேட்டுக்கொள்கிறேன்.

**'திராவிட மாடல்' ஆட்சியில் -
முன்னேற்றப் பாதையில் தமிழ்நாடு!**

காவல் துறைக்கு நாம் ஆற்ற வேண்டிய கடமையும், காவல் துறையினர் நம் மக்களுக்கு ஆற்ற வேண்டிய கடமைகளும் இணைந்து, நமது 'திராவிட மாடல்' ஆட்சியில் தமிழ்நாட்டை முன்னேற்றப் பாதையில் நிச்சயம் கொண்டு செல்லும் என இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மக்களாட்சிக்கு மதிப்பு!
உறுப்பினர்களுக்கு மனமார்ந்த நன்றி!**

பேரவைத் தலைவர் அவர்களே,

கடந்த மார்ச் 20 ஆம் தேதியன்று தொடங்கிய இந்த சட்டமன்றக் கூட்டத் தொடர், இன்றுடன் முடிவடைகிறது. இந்த 21 அலுவல் நாட்களும் இந்த அவை ஆக்கபூர்வமாகச் செயல்பட்டது. மக்களாட்சிக்கு மதிப்பளிக்கும் விதமாக, அவை நடவடிக்கைகளில் ஈடுபட்ட அத்தனை சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்தக் கூட்டத் தொடரிலும், ஆளுங்கட்சி உறுப்பினர்களைவிட எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கே அதிக நேரம் பேச வாய்ப்பு தரப்பட்டதாக நான் கருதுகிறேன். அந்த வகையில், இந்த அரசுக்குப் பல்வேறு ஆக்கப்பூர்வமான ஆலோசனைகளை வழங்கிய எதிர்க்கட்சித் தலைவர், பல்வேறு கட்சிகளின் சட்டமன்றக் குழுத் தலைவர்கள் என அனைவருக்கும் இந்த நேரத்தில் நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல், மக்களாட்சியின் மாண்பைக் காக்கும் விதத்தில், இந்த மாமன்றத்தை வழிநடத்திய சட்டபேரவைத் தலைவரான தங்களுக்கும் நன்றி கூறி விடைபெறுவதற்குமுன், சில முக்கிய அறிவிப்புகளை வெளியிட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார். அதனைத் தொடர்ந்து காவல் துறை மற்றும் தீயணைப்புத் துறை தொடர்பான அறிவிப்புகள் வெளியிடப்பட்டன.

தொகுதி மக்கள் சார்பில் நாம் வந்திருக்கிறோம் என்பதை உணர்ந்து

சட்டமன்ற உறுப்பினர்கள் வர்ணனையைத் தவிர்த்து மக்கள் பிரச்சினையை பேசுங்கள்!

பொதுத்துறை மானியக் கோரிக்கையில் நீர்வளத்துறை அமைச்சர் - அவை முன்னவர் துரைமுருகன் வலியுறுத்தல்!

சென்னை, ஏப்.22–

சட்டப்பேரவையில் பொதுத்துறை மானியக் கோரிக்கையின் போது நீர்வளத்துறை அமைச்சர், அவை முன்னவர் தொகுதி மக்கள் சார்பில் நாம் இங்கே வந்திருக்கிறோம் என்பதை உணர்ந்து உறுப்பினர்கள் வர்ணனையைத் தவிர்த்து சப்ஜெக்டை பேச வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன் என்று குறிப்பிட்டார்.

சட்டப்பேரவையில் பொதுத்துறை – மாநில சட்டமன்றம் ஆளுநர் மற்றும் அமைச்சரவை துறைகளின் மானியக் கோரிக்கையில் நீர்வளத்துறை அமைச்சர் – அவை முன்னவர் துரைமுருகன் அவர்களின் பதிலுரை வருமாறு:–

பொதுத் துறை, மாநில சட்டமன்றம், ஆளுநர் மற்றும் அமைச்சரவை ஆகிய துறைகளின் சார்பாக உறுப்பினர்கள் கோ. செந்தில் குமார், முனைவர் கோவி. செழியன், ந. தியாகராஜன், ஆர். ராதாகிருஷ்ணன், ஒ. ஜோதி, தி. வேல்முருகன், பொன். ஜெயசீலன் மற்றும் இரா. அருள் போன்றவர்களெல்லாம் உரையாற்றியிருக்கிறார்கள். பல்வேறு கருத்துகளையெல்லாம் தெரிவித்திருக்கிறார்கள். அதில், எல்லோரும் தங்களுக்கு அதிகமான சம்பளம் என்று கேட்டதைவிட, முன்னாள் எம்.எல்.ஏ.க்களின்மீதுதான் ஓய்வூதியத்தை அதிகரித்துத் தர வேண்டும் என்று ஒட்டுமொத்தமாகக் கேட்டார்கள். அதற்காக முதல்வர் அவர்கள் உங்களுடைய மனம் திருப்திப்படுகின்ற வகையில் இங்கே அறிவிப்பு செய்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களுக்கும் செய்திருக்கிறார்கள்.

உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி

இங்கே பேசியவர்கள் மட்டுமல்லாமல், எல்லோருடைய Cut Motionsஐப் படித்துப் பார்த்தேன். அதைப் பற்றி பிறகு சொல்கிறேன். உறுப்பினர்கள் தொகுதி மேம்பாட்டு நிதியில் ரூ.3 கோடிதான் கொடுக்கிறீர்கள்; அதை அதிகரித்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்கிறீர்கள். அதில் எனக்கு ஒன்றும் மாறுபட்ட கருத்து இல்லை. என்னுடைய தொகுதிக்கும் 3 கோடி ரூபாய்க்கும் அதிகமாகக் கிடைக்கும். ஆனால், அதில் என்ன ஒரு பிரச்சினை என்றால், அதற்கு GST பிடித்துக்கொள்கிறார்கள். அதைப் பிடித்துக்கொள்வதுதான் கொஞ்சம் கஷ்டமாக இருக்கிறது. அதை முதல்வர் அவர்களும், நிதி அமைச்சர் அவர்களும் பின்னர் யோசிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அடுத்து, 100 நாட்கள் சட்டமன்றக் கூட்டத் தொடர் நடக்க வேண்டுமென்று சொன்னார்கள். அது விதி 183ன்படி சட்டமன்றம் நடத்த வேண்டும். ஆனால், எவ்வளவு நாட்கள் நடத்த வேண்டும் என்பதை Business Advisory Committeeல்தான் முடிவு செய்கிறோம். அந்தக் கூட்டத்தில் அனைத்துக் கட்சித் தலைவர்களும் உட்கார்ந்து பேச வேண்டும். அதில் என்ன ஒத்துக்கொள்கிறோமோ அதன்படிதான் நாங்கள் சட்டமன்றக் கூட்டத் தொடரை நடத்துகிறோமே தவிர, நாங்களாகவே இத்தனை நாள்தான் நடத்த வேண்டும் என்றெல்லாம் சொல்லவில்லை. நாம் எல்லோரும் ஒன்றாகச் சேர்ந்துதான் முடிவெடுத்திருக்கிறோம். அது முடிந்துவிட்டது.

வெளி மாநிலங்களுக்கு குழுக்கள்

அடுத்து, Committee Members இருக்கிறார்கள் அல்லவா! பொதுவாக, Public Accounts Committee, Estimates Committee போன்று நிறைய committees இருக்கின்றன. இங்கேயே ஒருகாலத்தில் tour போவார்கள். ஆனால், வெளி மாநிலங்களுக்குச் செல்ல வேண்டுமென்பதை முதலில் கொண்டு வந்தவர், விநாயகம் அவர்கள். அண்ணா அவர்கள் Chief Minister ஆக இருந்தபோது, விநாயகம் அவர்கள் Public Accounts Committeeன் தலைவராக இருந்தார். அவர்தான் வெளி மாநிலங்களுக்கு tour செல்ல வேண்டுமென்று கேட்டார்கள். விநாயகம், இங்கேயே சுற்றிப் பார்த்தால் போதுமே என்று முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அவரும், இவரும் classmates. வெளி மாநிலங்களுக்குச் செல்ல வேண்டுமென்று விநாயகம் அவர்கள் சொன்னார்கள்.

'மனம்போல் மாங்கல்யம்' என்று எழுதி, அவர் permission கொடுத்தார். அதற்குப் பிறகுதான் வெளிமாநிலங்களுக்கு குழுக்கள் செல்ல ஆரம்பித்தன. சென்ற ஆண்டு எந்தக் குழுவும் போக முடியவில்லை. ஏனென்றால், கொரோனா வந்துவிட்டது. அதற்குப் பிறகு யாரும் போகமுடியவில்லை. இந்த ஆண்டு, வெளிமாநிலங்களுக்கு போக வேண்டிய Committeeesஐ முதலமைச்சர் அவர்கள் தடுக்கமாட்டார், போகிறோம். ஆனால், Petition Committeeகூட போக வேண்டும் என்று சொல்கிறார்கள். அதுதான் ஆச்சரியம். Estimates Committee, Public Accounts Committee போன்ற Committee எல்லாம் இருக்கிறது, அவர்கள் வெளிமாநிலங்களுக்கு போகலாம். Petition Committeeம் நாங்கள் Odishaக்கு போகவேண்டும் என்றால், அங்கே, எப்படி petition வாங்கவேண்டும் என்பதைத் தெரிந்துகொள்வதற்காகவா போக வேண்டும். அந்த Committee, petitionஐ இங்கேயே வாங்கிவிடலாம். ஆகையினால் அதைச் செய்யலாம்.

இரண்டாவது, Commonwealth Parliamentary Association Issue. எம்.ஜி.ஆர்., இருந்தபோது அனுப்பினார், நான் இல்லை என்று சொல்லவில்லை. Parliamentary Committeeல் நானும் போயிருக்கிறேன். ஆகையால் அதுகுறித்து, நாங்கள் ஆட்சிக்கு வந்தவுடனே எல்லோரும் சேர்ந்து, பழைய எம்.எல்.ஏ.க்களுக்காக கட்டியிருக்கிற புதிய கட்டடத்தில் ஒரு meeting போட்டோம். அப்போது எதிர்க்கட்சி எம்.எல்.ஏக்கள் எல்லோரையும் கூப்பிட்டு, Parliamentary Committeeக்கு போவதைப் பற்றி பேசினோம். அவை எல்லாவற்றையும் முதலமைச்சர் அவர்களிடம் சொல்லலாம் என்று பார்த்தோம். அதை முதலமைச்சர் அவர்களிடம் சொல்வதற்கு முன்பே, கொரோனா வந்துவிட்டதால் முகமூடியைப் போட்டுக்கொண்டோம். அதோடு அது முடிந்துவிட்டது. ஆகவே, அந்த நிலை வருகின்றபோது இந்த ஆண்டு எங்கே போகலாம் என்பது குறித்து யோசித்து நிதிநிலைமைக்கு ஏற்ப, அப்போது வைத்துக்கொள்ளலாம். அப்போதெல்லாம், என்ன செய்வார்கள் என்று கேட்டீர்களென்றால், 5 இலட்சம் ரூபாய் செலவாகிறது என்றால், 2½ இலட்சம் ரூபாய் இவர்கள் கொடுக்கவேண்டும். 2½ இலட்சம் ரூபாய் சர்க்கார் கொடுக்க வேண்டும். அந்தமாதிரிதான் அவர்கள் செலவு செய்துகொண்டு வெளிமாநிலங்களுக்கு போவார்கள். ஆகவே, அதுபோல இந்த வருடம் செலவு செய்துகொண்டு போகிறவர்களுக்கு, அனுமதி உண்டா என்பதை அப்போது தீர்மானித்துக்கொள்ளலாம். அடுத்து, முன்னாள் எம்.எல்.ஏ.க்கள் பிரச்சினை முடிந்தது. அடுத்து, இவர்கள் சட்டமன்றத்தின் நிகழ்ச்சிகளை நேரடி ஒளிபரப்பு செய்ய வேண்டும் என்று கேட்டார்கள். அதற்கான discussion அன்றே முடிந்துவிட்டது. அதைப் பற்றிய பிரச்சினை ஒன்றுமில்லை. 100 நாட்கள், 120 நாட்கள் நடத்தலாம் என்பதற்கு பதில் சொல்லியாகிவிட்டது.

சட்டமன்ற குடியிருப்புக்கு வை-பை வசதி

சட்டமன்ற குடியிருப்பு வளாகத்திற்கெல்லாம் WiFi வேண்டுமென்று கேட்டார்கள். WiFiக்கு கிட்டத்தட்ட 1 கோடியே 37 இலட்சம் ரூபாய்க்குமேல் நிதி கேட்டு, நிதித் துறைக்கு அனுப்பியிருக்கிறோம். கோப்பில் கையெழுத்தானவுடன் எல்லோருக்கும் WiFi வந்துவிடும்.

சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் நேர்முக உதவியாளர்களை நியமிக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அவர்களின் தொகுதிக்கு செயலாளர் நியமிக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். இதெல்லாம் சாதாரண விஷயம். விடுதி பராமரிப்பு செய்ய வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். நிச்சயமாக பராமரித்துவிடலாம்.

அடுத்து, பட்ஜெட் கூட்டத்தொடரை உதகமண்டலத்தில் நடத்த வேண்டும். அருள், உங்களுக்குத் தெரியுமா! அதுபோலத்தான், ஒரு காலத்தில் காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர்கள் அங்கே நடத்த வேண்டுமென்றார்கள். அது ஒருகாலம். ஏனென்றால் அப்போதும் பயங்கரமான வெயில்காலம். ஆனால், இதுபோன்ற AC எல்லாம் அப்போது இல்லை. புழுக்கத்தினால், நீங்கள் எல்லோரும்—அந்த காலத்தில் நூற்றுக்கணக்கான Fan சுற்றும். தலைவர் வந்ததற்குப் பிறகுதான் AC வசதி செய்து கொடுத்தோம். அதற்கு முன்பு Fan வசதிதான் இருந்தது. அப்போது அங்கு போகக்கூடாது என்பதற்காக கலைஞர் அவர்கள், 'கும்பி கருகுது, குடல் வேகுது, உங்களுக்கு ஊட்டி குளுகுளு வாசம் ஒரு கேடா?' என்று ஒரு வசனம் எழுதினார். அப்படி வசனம் எழுதின நாங்கள், உங்களை ஊட்டிக்கு கூப்பிட்டுக்கொண்டு போக வேண்டுமா? வேண்டாம், அதை எடுத்துவிடுங்கள். அது தேவையில்லை. இங்கேயே கொஞ்ச நேரம் சென்றதும் வெளியே சென்று, 'ACஐ குறையுங்கள், ரொம்ப குளிராக இருக்கிறது' என்று சொல்லிவிட்டு வருகிறோம். ஆகையால், ஏதாவது கேட்கவேண்டும் என்று இவர் கேட்டு வைத்திருக்கிறார்.

உறுப்பினர்களுக்கு விளையாட்டு போட்டி

உறுப்பினர்களுக்கு விளையாட்டு போட்டி நடத்துவது, முன்பெல்லாம் இந்த பட்ஜெட் முடியும்போது எல்லோருக்கும் ஒரு விளையாட்டுப் போட்டி நடத்துவோம். ஒரு காலத்தில் மா.பா. சாரதி, பெரிதாக குண்டாக இருப்பார். அவரும், வினாயகமும் குத்துச் சண்டை போட்டு கீழே விழுந்தார்கள். அதுபோல் நடத்துவார்கள். கயிறு இழுக்கும் போட்டி எல்லாம் தமாஷாக நடக்கும். சிலர் பாட்டு பாடுவார்கள். கே.கே. ஷா அப்போது இருந்தார். அவர், என்னை பாட்டு பாடச் சொன்னார். எனக்கு பாடவே தெரியாது. 'இல்லை, இல்லை, நீங்கள்தான் பாட வேண்டும்' என்றார்கள். எல்லோரும் உட்கார்ந்திருந்தார்கள். நான் பாடினால், எல்லோரும் மரியாதை கொடுப்பீர்கள் என்று சொன்னேன். என்ன மரியாதை கொடுக்க வேண்டும் என்றார்கள். 'ஜன கன மன' என்று தேசிய கீதத்தை நான் பாடினேன் பாருங்கள், எல்லோரும் எழுந்து நிற்கிறார்கள். 'இன்னும் நிகழ்ச்சி இருக்கிறது, உட்காருங்கள், இன்னும் நிகழ்ச்சி இருக்கிறது, உட்காருங்கள்' என்று சொன்னார்கள். 'முடியாது, இவர் பாட்டு பாடுவதை நிறுத்தமாட்டார்' என்று சொன்னார்கள். அந்தமாதிரி எல்லாம்கூட நடக்கும். அந்தமாதிரி நடத்தினோம். இந்த ஆண்டு வேண்டாம். அடுத்த ஆண்டு நடத்தப்படும் என்ற உறுதியை உங்களுக்கு தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறோம்.

அதுதான் 25,000 ரூபாய் கொடுக்கிறோமே. அது போதும். நடத்துங்கள். புதிய சட்டமன்றம் கட்ட வேண்டுமென்று ஒரு கோரிக்கை வைத்திருக்கிறீர்கள். அதை நானும் ஏற்றுக்கொள்கிறேன். முதலமைச்சர் அவர்களிடம் நானும் சேர்ந்து வேண்டுகிறேன். விரைவில் தளபதி அவர்களின் ஆட்சிக் காலத்தில் ஒரு புதிய சட்டமன்றத்தைக் கட்டுவார். ஏனென்றால், எல்லோரும், கேரளா சென்று பாருங்கள்; ஆந்திரா சென்று பாருங்கள். (குறுக்கீடுகள்) எங்கே, ராஜ் பவனிலா?

புதிய சட்டமன்றம் கட்டப்படும்!

Raj Bhavan பற்றி ஒன்றை நீங்கள் தெரிந்துகொள்ளுங்கள். அது நம்முடைய இடம். அதனுடைய வரலாற்றை நான் படித்துப் பார்த்தேன். முதலில் ஆளுநர் மாளிகை அங்கு இல்லை. வேறு ஒரு பிரச்சினை காரணமாக ஆளுநர் அவர்களுக்கு அங்கே இடம் தரப்பட்டது. ஆகையினால், அதை எடுத்துக்கொள்ளலாம். Guindy Race Course அமைந்துள்ள இடம் 700 ஏக்கர். அவர்களால் பணம் கட்ட முடியவில்லை. அது நம்முடைய அரசாங்கத்தினுடைய இடம்தான். அதையும் நாம் எடுத்துக்கொள்ளலாம். முதலமைச்சர் அவர்கள் எங்கேயோ ஓரிடத்தில் 'அவர்களுடைய காலத்தில் தான் தமிழ்நாட்டில் புதிய சட்டமன்றம் அமைக்கப்பட்டது' என்ற வரலாற்றை உருவாக்க வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) அதையும் இந்த periodலேயே செய்துவிட வேண்டும். அப்போதுதான் நாம் அங்கு சென்று அமர முடியும்.

அடுத்தது. சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் car pass குறித்தது. அனைத்து சுங்கச் சாவடிகளிலும் வாகனங்கள் தடுத்து நிறுத்தப்படாத வகையில் car pass வேண்டுமென்று சொல்கிறீர்கள். நீங்கள் எங்கே வண்டியை நிறுத்துகிறீர்கள். நீங்கள் போகும் வேகத்திற்கு அவர்கள்தான் தெறித்து கொண்டு ஓடிப் போகிறார்கள். அதனால் தான் car pass எல்லாம் வழங்கிவிடலாம். அதில் ஒன்றும் பிரச்சினையில்லை.

சட்டமன்ற உறுப்பினர்களுடைய ஊதியத்தை உயர்த்த வேண்டுமென்று கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது. அது தற்போது முடியவே முடியாது. அடுத்ததாக, சட்டமன்ற உறுப்பினர்களுடைய ஓய்வூதியம் குறித்தது. அதுவும் அறிவிக்கப்பட்டுவிட்டது. அது குறித்து முதலமைச்சர் அவர்கள் சட்டமன்றத்திலேயே இன்றைக்கு அறிவித்து விட்டார்கள்.

அடுத்து, அமைச்சர்களுடைய ஊதியம் உயர்த்தப்பட வேண்டுமென்று ஜி.கே. மணி அவர்கள் கோரிக்கை வைத்துள்ளார்கள். எங்களுடைய ஊதியத்தை உயர்த்த வேண்டுமென்று நீங்கள் கோரிக்கை வைத்துள்ளீர்கள். அவர், மிக நல்ல மனிதர். ஜி.கே. மணி அவர்கள், மணி, மணியான மனிதர். நன்றாகக் கேட்டிருக்கிறார். அவருக்காக இதை சொல்கிறேன்.

சட்டமன்றம் உயர்வான மன்றம்

இவ்வாறு உறுப்பினர்கள் கேட்டதில், நம்மால் முடிந்ததையெல்லாம் கொடுத்து முடித்துவிட்டோம்.

ஆனால், உறுப்பினர்களுக்கு ஒன்றே ஒன்றை மட்டும் நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இந்த மன்றம் உயர்வானதொரு மன்றம். ஒவ்வொருவருடைய தொகுதியிலும் குறைந்தபட்சம் 2.5 இலட்சம் மக்கள் இருப்பார்கள். அந்த 2.5 இலட்சம் மக்களில், நாமெல்லாம் இந்த இடத்தில் வந்து அமர்ந்திருக்கிறோம் என்று சொன்னால், நமக்குதான் அந்த பாக்கியம் கிடைத்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) இது கிடைக்க முடியாத பாக்கியம். வைதிக மொழியில் சொல்ல வேண்டுமென்றால், அவரவர்களுக்கு பிராப்தம் கிடைத்திருக்கிறது என்று சொல்லலாம். இந்த மன்றத்தில் நாம் இருந்தோம் என்பதே நம்முடைய வருங்கால சந்ததியினருக்கு, 'என்னுடைய தாத்தா இங்கே இருந்தார்; என்னுடைய பாட்டனார் இங்கே இருந்தார்' என்று சொல்வது பெருமையான ஒன்று. இந்த மன்றத்தில் மிகப் பெரிய ஆட்கள் எல்லாம் நீண்டகாலம் இருந்திருக்கிறார்கள். நானும் கிட்டத்தட்ட 50, 60 வருடங்களாக இங்கே அமர்ந்து இந்த சபை நடவடிக்கைகளை பார்த்துக் கொண்டிருக்கிறேன். இந்த மன்றத்தில் எனக்கு ஒரே ஒரு குறை என்னவென்றால், எனக்கு மட்டும் அந்த குறை இல்லை. முதலமைச்சர் அவர்களுக்கும் குறை உண்டு. எங்களுடைய முதலமைச்சர் அவர்கள், எங்களுடைய கட்சிக் கூட்டங்களிலும் சரி; இங்கேயும் பல முறை சொல்லியிருக்கிறார். உறுப்பினர்கள் பேசுகின்றபோது வர்ணனையை தவிர்த்துவிட்டு, நேரடியாக சப்ஜெக்ட்டில் பேசுங்கள். ஏனென்றால், உங்களுடைய கிடைக்கும் வாய்ப்பில் அந்த நேரத்தை நீங்கள் பயன்படுத்திக் கொள்ள முடியும். ஆனால், ஒரு elderly person என்ற வகையில் சொல்கிறேன் என்பதற்காக யாரும் வருத்தப்பட மாட்டீர்கள் என்பதற்காக சொல்கிறேன். அவையின் பாதி நேரங்கள் வர்ணனையிலேயே செலவாகி விடுகின்றன. அவரை வணங்குகிறேன். இவரை வணங்குகிறேன் என்று தெரிவித்து கொண்டு, நீங்கள் இப்படியே வணங்குகிறேன் என்று தெரிவித்துக்கொண்டே இருப்பதால் யாராவது திருப்தி அடைவார்கள் என்று நினைக்கிறீர்களா? நீர்வளத் துறை அமைச்சர் அவர்களை வணங்குகிறேன் என்று என்னை சொன்னவுடன், நம்மை அவர் வணங்குகிறேன் என்று சொல்லிவிட்டார் என்று நான் பெருமிதம்கொள்வேன் என்று நினைக்கிறீர்களா? அதற்கு பதிலாக அந்த நேரத்தை அவர் வீணடித்து விட்டாரே என்று வருத்தம்தான் படுகிறேன்.

சிதம்பரத்தில் ஒரு மாணவர் அணி மாநாடு நடைபெற்றது. அண்ணா அவர்கள் அமர்ந்திருந்தார். அவருக்கு பின்புறம் நான் அமர்ந்திருந்தேன். ஆலடி அருணா அவர்கள் பேசும்போது, அண்ணா அவர்களை புகழ்ந்து பேசுகிறார். காஞ்சி கரிபால்டி, ஆஹா ஓஹோ என்று புகழ்ந்து பேசுகிறார். அமர்ந்திருந்த அண்ணா அவர்கள், 'அருணா இங்கே வா' என்று அவரை அருகில் அழைத்தார். என்னை காஞ்சி கரிபால்டி, single tea, double tea என்று சொல்வதற்கு ராஜ கோபால் இருக்கிறார். காஞ்சிபுரத்தில் நிறைய பேர் இருக்கிறார்கள். உனக்கு அளிக்கப்பட்டுள்ள சப்ஜெக்ட் என்ன என்றார். 'Democratic Socialism' என்று பதில் சொன்னார். அதுபற்றி தெரிந்தால் பேசு. இல்லையென்றால் அமைதியாகச் சென்று உட்கார் என்று சொன்னார்.

அதற்கு பிறகு, ஆலடி அருணா அவர்கள் பேசினார். மிக அற்புதமாக பேசினார். பேசி முடித்து வந்த பின்னர், அண்ணா அவர்கள் எழுந்து நின்று அவரை அழைத்து, அவருடைய முதுகில் தட்டிக்கொடுத்து, இவ்வளவு சப்ஜெக்ட்டை வைத்துக்கொண்டு, எதற்காக நீ என்னைபோய் வர்ணித்து கொண்டிருக்கிறாய், இதனால் நான் மகிழ்ச்சி அடைந்துவிடுவேன் என்று நீ கருதுகிறாயா? என்று கேட்டார்.

அண்ணா அவர்கள் கொஞ்சம்கூட முகஸ்துதி பிடிக்காத மனிதர். முகஸ்துதி என்றாலே கீழே விழுவதாக அர்த்தமாம். முகஸ்துதிக்கு மயங்குகிற எவரும் ஆகையினால், என்னைப் பொறுத்தவரையில் சொல்கிறேன், சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு, முதன்முறை சட்டமன்றத்தில் பேசும்போது வேண்டுமென்றால், எனக்கு வாக்களித்த மக்களுக்கு நன்றி. நான் போட்டியிட வாய்ப்புக் கொடுத்த தலைவருக்கு நன்றி என்று சொல்வார்கள்.

எல்லாவற்றையும் சொல